# கோவிந்த சதகம்

பாட்டும் குறிப்பும்

வாவிள்ள இராமசாமி சாஸ்த்ருலு & ஸன்ஸ்

சென்னை.

1926

உ

நாராயண பாரதியார்

இயற்றிய

# கோவிந்த சதகம்

பாட்டும் குறிப்பும்

பதிப்பாசிரியர் :

சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர்

மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள்

வெளியிடுவோர் :

வாவிள்ள

இராமசாமி சாஸ்த்ருலு அண்ட் ஸன்ஸ்

292, எஸ்பிளனேட், சென்னை.

*All Rights Reserved.*]

[அக்ஷய ஆனி

PRINTED AT THE SRI RAMA PRESS,
15, BROADWAY, MADRAS.—1926

உ

கடவுள் துணை

# பதிப்புரை

வட மொழியிலும் தெலுங்கிலு முள்ள சிறந்த நூல்களைச் சென்ற எழுபது ஆண்டுகளாக ஒழுங்காக அச்சிட்டுக் கொண்டு வருகின்றோம். எமது முயற்சியின் பயனாக இவ்விரு மொழிகளிலும் சிறந்து விளங்கும் அரிய பழைய நூல்களும் புதிய நூல்களும் அச்சிடப்பட்டு எல்லாருக்கும் எளிதிலே பயன்பட்டு வருகின்றன. இத்தகைய எமது முயற்சியினால் ஏறக்குறைய எல்லா நூல்களும் சிறந்த முறையில் அச்சிட்டு வெளியாகி யாவராலும் போற்றப் பட்டு வருகின்றன.

தமிழ் மொழியில் விளங்குகின்ற சங்க நூல்கள் தமிழர் எண்ணங்களையும், கல்வி அறிவு நுட்பங்களையும், நாகரிக இயல்புகளையும் இனிது விளக்குதலின் அவற்றைத் தமிழ் நாட்டில் வாழும் ஒவ்வொருவரும் அறிய வேண்டுவது கடமையாகும். இக்கருத்துக் கிணங்கத் தமிழ் நூல்கள் எல்லாவற்றையும் உயர்ந்த பதிப்புக்களாக அச்சிட எண்ணி ஒருதனி அச்சுக்கூடத்தை அதற்கெனவே வரையறுத்து வைத்துள்ளோம். இது நாளடைவில் வளர்ச்சியுறுமென நம்புகின்றோம்.

தமிழில் நிறைந்த புலமையுடைய அறிஞர்களைக் கொண்டு ஒவ்வொரு புத்தகத்துக்கும் குறிப்புரை, முகவுரை, பாடபேதம் முதலியவற்றைச் செவ்வையாக, எழுதுவித்துத் தகுந்த முறையில் அச்சிட்டு வெளியிடுதலும், ஆங்கிலம் அறியாத தமிழ் மக்கள் இனிது உணர்ந்து பயனடையுமாறு கதை, பௌதிக சாத்திரம், இரசாயன சாத்திரம், தத்துவ சாத்திரம், தேசீய சாத்திரம், பொருள் நூல் முதலியவற்றைத் தக்கவர்களைக் கொண்டு நன்கு மொழி பெயர்த்து அழகிய உரை நடையில் ஆராய்ந்து எழுதுவித்து வெளியிடுதலும் எமது நோக்கங்களாகும்.

இவ் வகையில் இடம், பொருள், ஏவல் கிடையாமையினால் இதுவரையில் வெளிப்படாதிருக்கும் அறிவு ஆராய்ச்சி நுட்பங்கள் இதனால் வெளிவர இடம்பெறுமாயின் எமது முயற்சி பயனடைந்ததெனை எண்ணி மகிழ்வோம். தமிழகத்தார் எமது முயற்சி இனிது முடியுமாறு உதவிசெய்ய வேண்டுமென எல்லாம் வல்ல இறைவன் திருவருளை வழுத்துகின்றோம்.

உடனே வெளிவரும் எமது பதிப்புக்கள் :

**வசன நூல்கள்**

1. மனுமுறை கண்ட வாசகம்
2. சீவகாருண்ய ஒழுக்கம்
3. பஞ்ச தந்திரம்
4. கதாமஞ்சரி
5. விநோதரச மஞ்சரி

**பாராயண நூல்கள்**

1. திருமுருகாற்றுப்படை
2. கந்தரனுபூதி
3. கந்தர் கலிவெண்பா
4. விநாயகர் அகவல்
5. சரசுவதியந்தாதி

6. அபிராமி அந்தாதி
7. சிவானந்த லகரி
8. சௌந்தரிய லகரி
9. இலக்குமி தோத்திரம்
10. நால்வர் நான்மணிமாலை

## நீதி நூல்கள்

1. திருக்குறள்
2. நாலடியார்
3. நீதி நெறி விளக்கம்
4. ஆசாரக் கோவை

## திருக்குறள் விளக்கநூல்கள்

1. சிவசிவ வெண்பா
2. சோமேச வெண்பா
3. இரங்கேச வெண்பா
4. ஆத்திசூடி வெண்பா
5. திருத்தொண்டர்வெண்பா

## திரட்டு நூல்கள்

1. அருட்பா
2. தேவாரம்
3. திருப்புகழ்
4. பட்டினத்தார் பாடல்
5. தாயுமானவர் பாடல்

## சதகங்கள்

1. அறப்பளீசுர சதகம்
2. நாராயண சதகம்
3. தண்டலையார் சதகம்

## இலக்கணமும் நிகண்டும்

1. நன்னூல்
2. நேமிநாதம்
3. புறப்பொருள்வெண்பாமாலை
4. பதினோராவது நிகண்டு
5. திவாகரம்

வாவிள்ள இராமசாமி சாஸ்த்ருலு அண்ட் ஸன்ஸ்.

# முகவுரை

---

கோவிந்த சதகம் இயற்றியவர் நாராயண பாரதியார் என்னும் புலவர்; இவர் வெண்ணி என்னும் ஊரிலே பிறந்தவர்; இவரைப் பற்றிய வரலாறுகள் வேறொன்றும் தெரியவில்லை. இவர் தந்தையார் பெயர் முத்தாரையனார் என்பது திருவேங்கட சதகத் தனியனால் விளங்குகிறது. திருவேங்கட சதகமும் இவரால் இயற்றப்பட்டதே போலும். இவர் 'அச்சுதாநந்த கோவிந்தனே' என மகுடம் அமைத்து இந்நூலைப்பாடியிருத்தலினாலும், இதன் இறுதியிலே, 'இந்தச் செனனத்தில் துன்பப் படாமலிருந்திட வைகுந்தப் பதவிபெற்றேன்' என்று கூறியிருத்தலினாலும் இவருடைய சமயம் வைணவம் என்பது தெளிவாக விளங்கும். இதன்கண் இவர் பல பழமொழிகளை அமைத்து எளிதாக யாவருக்கும் விளங்கும் வண்ணம் பாடி இருக்கின்றார். இப்பாட்டுக்களைக் கட்டளைக் கலித்துறையிலே அமைத்திருத்தல் பழமொழி ஆட்சிக்குப் பொருத்தமாகக் காணப்படுகிறது. இந்நூல் பல உலக உண்மைகளைப் பற்றி வரும் பழமொழிகளோடு இனிய தெள்ளியநடையிலே இயன்றிருத்தலின் அனைவருக்கும் பயன்படுவதாம். தமிழ் கற்போர் இதனை முதலிலே படித்து வருகின்ற வழக்கம் உண்டு. இது மிக சமீப காலத்து நூலென்பது வெளிப்படை. இதன்கண் வடமொழியிலும் தமிழிலும் வழங்கும் சாதாரண மொழிகளும் விரவி வருகின்றன.

மணி. திருநாவுக்கரசு முதலியார்

# பொருளடக்கம்


பதிப்புரை — பக்கம்

முகவுரை

காப்பு

நூல்

அயன் கணக்கு ஆருக்கும் தப்பாது .... 3

அரைக்காசுக்குப் போன கற்பு ஆயிரங் கொடுத்தாலும் வராது .... 4

அழிந்த நந்தவனத்திலே அசுவம் மேய்ந்தென்ன கழுதை மேய்ந்தென்ன ? .... 19

அற்பருக்குப் பவிஷு வந்தால் அர்த்த ராத்திரியிலுங் குடை பிடிக்கச் சொல்வார் ... 13

ஆடு கொழுக்கிறது இடையனுக்கு லாபம் .... 20

ஆண்டி கையில் அகப்பட்ட குரங்காய் அலைவார் ... 7

ஆயிரம் பசுக்களில் ஒருபசு உதைத்துக் கொண்டால் என்ன ? .... 26

ஆனைகட்டச் சங்கிலி தானே எடுத்துக் கொடுக்கும் 20

இயல்பாய் மணமில்லாத சந்தனக்கட்டை இழைத்தாலுங் குழைத்தாலு மணக்காது ... 25

இராவுத்தனைத் தள்ளின குதிரை குழியும் பறித்ததுபோல ... 11

பக்கம்


இறந்தவன் பிள்ளை இருந்தவன் அடைக்கலம் .... 26
உடும்புபோனாலும் போகட்டும் கையை விட்டாற் போதும் ... 19
உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது 22
எய்தவனிருக்க அம்பை நோகலாமா? ... 15
எருது ஈன்ற தென்றால் கொட்டாயிற் கட்டென்பவருண்டு .... 6
எல்லை பாழ்பட்டாலும் கொல்லைக் கடமை விடார் .... 9
ஏர் பிடித்தவன் என்ன செய்வான் யானை பிடித்தவன் பாக்கியம் ... 18
ஐங்காதம் போனாலும் அகப்பை விலை அரைக்காசுதான் ... 22
ஒரு புத்திரனும் குரு புத்திரனாகான் ... 15
கங்கா நதியில் முழுகினாலுங் காக்கை அன்னம் ஆமா? ... 10
கசக்கி முகரலாகாது ... 14
கப்பலேறிப் பட்ட கடன் கொட்டை நூற்றோ விடியும்? .... 10
கரும்பு கசப்பது வாய்க்குற்றம் .... 26
கரும்பு தின்னக் கூலி கொடுப்பார்களா? ... 27
கரும்பு ருசியென்று வேரோடே பிடுங்கலாகாது... 19
கவி கொண்டார்க்குங் கீர்த்தி கலைப்பார்க்குங் கீர்த்தியா? ... 4
கழுதைக்கு விரி கட்டினதினாலே குதிரையாமா?... 18

பக்கம

கறையான் புற்றில் அரவங் குடிகொண்டது போல ... 13

காலத்துக்குத் தக்க கோலம் ... 2

கிளியை வளர்த்துப் பூனை கையிற் கொடுப்பாருண்டா ? ... 14

குங்குமஞ் சுமந்த கழுதை மணமறியாது .... 17

குடியிருக்கிற வீட்டிலே கொள்ளி வைத்தாற் போல .... 23

குட்டிக்கரணம் போட்டாலுங் கொடுக்கிறது அரிது ... 3

குட்டுப் பட்டாலும் மோதிரக் கையாற் குட்டுப் பட வேண்டும் .... 9

குருவிக்கூட்டைக் கோலாலே குலைப்பார்களா ? .... 7

குழந்தையுந் தெய்வமுங் கொண்டாடின இடத்திலே ... 24

குளத்துக்கு மழை குந்தாணிபோற் பெய்யுமா? .... 3

குளத்தைக் கலக்கிப் பருந்துக்கு இரையிட்டது போல ... 21

குளப்படி நீரிறைத்தாற் கடற்பள்ளம் நிரம்புமா?... 6

கூடியிருந்து குலாவுவார் வீட்டில் ஓடியுண்ணுங் கூழுமினிதே .... 25

கெடுப்பாரைத் தெய்வங் கெடுக்கும் கொடுப்பாரைத் தடுக்கலாகாது ... 5

கொக்கரிப்பார்க்கா சொர்க்கம் தீயில் குதிப்பவளுக் கல்லவோ சொர்க்கம் ... 15

கொடிக்குக் காய் கனமா ? ... 11

பக்கம்

கொடுங்கோல் அரசர் கீழ்க் குடியிருக்க லாகாது.... 16
கொடுத்தாற் குறை வராது ... 3
கொட்டினல் தேள் கொட்டா விட்டாற் பிள்ளைப் பூச்சி ... 2
கொல்லைபாழானாலும் குருவிக்கு இரை பஞ்சமா?... 10
கொழுமீதி கொள்ளும் குடிச்செல்வமே செல்வம் ... 14
கொள்ளைக்குப் போனாலுங் கூட்டாகாது ... 20
கோடாலிக் காம்பு குலத்துக்கு ஈனம் ... 4
கோணக்கொம் பேறியென்ன குதிரை யேறியென்ன வீணர்க்குங் கீர்த்திக்கும் மெத்தவுந் தூரம்... 24
கோவுக் கழகு செங்கோல் .... 8
கோழி கூப்பிட்டு விடிகிறபொழுது குக்கல்குரைத்தா விடியும்? ... 22
செம்பாலடித்த காசுங் கொடார் ... 25
தம்மினந் தம்மைத் தாங்கும் முலை சரிந்தால் வயிறு தாங்கும் .... 18
தலைவன் நிற்கத் தண்டு நிற்கும், தலைவன் மயங்கச் சர்வமு மயங்கும் .... 23
தன்னைக் கொல்லவந்த பசுவைத் தான் கொன்றாற் பாவ மில்லை ... 24
தானே கனியாத காய் தடிகொண்டடித்தாற் கனியாது ... 14
திக்கு விசயங் கொள்பவனுக்கும் செயாப செய காலந் தெரியாது ... 9

பக்கம்


துற்சனப் பிள்ளைக்கு ஊரார் புத்தி சொல்வார் ... 21

தோட்டத்து நரி கூட்டத்திலே வராது ... 5

தோட்டிபோ லுழைக்க வேண்டும் துரைபோற் சுகிக்க வேண்டும் ... 21

நடந்தார்க்கு நாடெங்கும் உறவு கிடந்தார்க்குப் பாயே உறவு .... 26

நரிவால் பற்றி நதி கடக்க லாகாது ... 23

நல்லவர் கண்ணிற் பட்ட நாகமுஞ் சாகாது .... 16

நன்றிசெய்த கீரியைக் கொன்ற பழங்கதைபோல்... 12

நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தது போலாம் ... 7

நாய்வாலைக் குணக்கு எடுக்க ஆராலாகும்? ... 6

நீஞ்ச அறியாதவனை ஆறு இழுத்துக் கொண்டு போம் ... 12

நூற்றுக்கு இருப்பவர்க்கு ஐம்பதிற் சாவதில்லை நூற்றுக்கு இருந்தாலும் கூற்றுக்கு இரை .... 12

நெருப்புச் சிறிதென்று முன்றானையில் முடியலாமா? .... 11

படிக்கு அரசனிருந்தாற் குடிக்குச் சேதமில்லை .... 1

படியாள்வார் நீதி தப்பிற் குடி யார் இருப்பார் குவலயத்தில்? ... 8

பட்சி பசித்தாலும் எட்டிக்கனியைத் தின்னாது கொள்ளிகொண்டு தலைசொறிந்து கொள்ளார்... 17

பரத்தைக்குக் கொடுக்கும் பணயத்தைக் குடிப் பெண் வாங்கிக் குலங்கெடுவாளா? ... 15

பக்கம்

பனங்காட்டி விருந்துகொண்டு பாலைக் குடித்தா
னும் கள்ளென்பார்கள் .... 16
பன்றிக் குட்டிக்கு ஒரு சந்தியேன்? .... 13
பன்றிக்குட்டி பருத்த யானைக் குட்டியாமா? ... 24
பன்றியின் பின்போன பசுக்கன்றும் மலந்தின்
னும் ... 20
பாலைப் புகட்டுவாள் பாக்கியத்தையும் புகட்டு
வாளோ? ... 9
பிடாரியைப் பெண்டுவைத்துக் கொண்டவன்
பேயன் ... 13
புண்ணிலே கோலிட்டது போல ... 2
புலையனுக்கு வாக்கு சுத்தியும் ஆணையுமில்லை .... 16
பூ விற்குங் கடையிலே புல்லு விற்பது போல .... 17
பெருமான் நினைத்தால் வாழ்வுகுறைவா? பிரமா
நினைத்தால் ஆயுசு குறைவா? ... 18
பொருளும் போகமுங் கூடவரா? ... 25
பொல்லாக் குணத்துக்கு நல்ல மருந்துண்டா? ... 4
பொன்னின் குடத்துக்குப் பொட்டிட்டுப் பார்க்க
வேண்டுமா? ... 8
மழைக்குத் தண்ணீர் மொண்டு வார்ப்பவர் ஆர்? ... 23
மானுக்கொருபுள்ளி யேறினாலென்ன குறைந்தா
லென்ன? ... 10
மீன் குஞ்சுக்கு நீச்சுப் பழக்க வேண்டுமா? ... 11
முத்து குலத்தாற் பெருமைப்படும் மூடர் குலத்
தாற் பெருமைப் படார் ... 6

பக்கம்


முழுக்கட்டி பேர்க்கிற பன்றிக்குக் கொழுக்கட்டி விட்டதுபோலே .... 2

முற்ற நனைந்தார்க்குக் குளிரில்லை ... 12

வஞ்சகர்க்கு எத்தனை வாஞ்சையாய் நடக்கினும் நெஞ்சகந் தன்னில் நேசங்கொள்ளார் ... 27

வம்புத் துரைத்தனத்தாரைக்கும்பிடத்தகுமோ? ... 7

வயிற்றைப் பீறிக் காட்டினாலும் மகேந்திர சாலம் என்பார் ... 21

வல்லார் இளைத்தால் வந்திளைப் பாறுமென்று சொல்லா திரார்கள் சுத்தவீரர்கள் ... 27

வெள்ளாட்டிமேற் சன்னதம் வந்தால் விழுந்து விழுந்து கும்பிட வேண்டும் ... 5

# கோவிந்த சதகம்

## காப்பு

### கட்டளைக் கலித்துறை

மாவேழங் கூப்பிட வந்தா யுலகவ ழக்கச்சொல்லென்
பாவேற யானுனக் கோர்சத கஞ்சொலப் பாரதியென்
நாவேற வாழ்த்துகின் றேனுனைக் காத்தருள் நான்முகற்கும்
கோவேசக் கிராயுத னேஅச்சு தாநந்த கோவிந்தனே.

மா - பெரிய. வேழம் - யானை. பா - பாட்டு. பாரதி - கலைமகள். அச்சுதன் - அழியாதவன்.

---

## நூல்

### படிக்கு அரசனிருந்தாற் குடிக்குச் சேதமில்லை

செடிக்கொரு வேங்கை குடிகொண்ட காடெனத் தேசத்திலே
அடிக்கொரு தீம்புசெய் வாரைத் துரந்தர சாளஇந்தப்
படிக்கொரு மன்னனுண் டாமுழு தாபயிரிடுமக்
குடிக்கொரு சேதமுண் டோஅச்சு தாநந்த கோவிந்தனே.

வேங்கை - புலி. தீம்பு - தீது. துரத்தல் - ஓட்டுதல், படி - பூமி. (1)

கோட்டிஞல்தேள் கோட்டாவிட்டாற் பிள்ளைப்பூச்சி

கட்டாண்மை வேந்தர் பொறுமையென் ஞதவன் கண்ணரடி
பட்டாலல் லாமல் வணங்கார் விடமுட்படா மற்சும்மாத்
தொட்டா லதுபிள்ளைப் பூச்சியென் பார்முள் சுறுக்கெனவே
கொட்டாமல் தேளென்ப ரோஅச்சு தாநந்த கோவிந்தனே.

வன்கண்ணர் - கொடியவர். (2)

புண்ணிலே கோலிட்டது போல

பாலிட்ட தாகிய நீர்போற் கலந்து பகருங்கல்வி
நூலிட்ட கேள்விக்குள் ளாவர்நல் லோரிரு நூறுதரம்
மேலிட்ட புத்திசொன் ஞலுங் கயவர்க்கு வெந்தபுண்ணிற்
கோலிட்ட வாறொக்கு மேஅச்சு தாநந்த கோவிந்தனே.

பகரும் - சொல்லும். நூல் - புத்தகம். கயவர் - கீழ்மக்கள். (3)

முழுக்கட்டி பேர்க்கிற பன்றிக்குக் கொழுக்கட்டி விட்டதுபோல

கழுக்கட்டி யேற்றிஞுங் காசொன் றிலையெனக் கைவிரித்தே
மழுக்கட்டி யேந்தவல் லாரையுத் தியோகத்தில் மன்னர்வைத்தல்
முழுக்கட்டி பேர்த்துக் கிழங்குண்ணும் பன்றியின் மூஞ்சியிலே
கொழுக்கட்டி விட்டதன் ஞெஅச்சு தாநந்த கோவிந்தனே.

கழு - கழுமரம். கொழு - காறு. மழு - எரியிரும்பு. (4)

காலத்துக்குத் தக்க கோலம்

நீலங் கவர்விடப் பாம்பைப் பிடாரன் நியமிக்கவே
ஆலங் கரந்திட் டெலியுடன் வாழும்அர சர்க்கஞ்சிக்
காலங் கருதி வலியா ரெளியரைக் காண்கிலனு
கூலரைப் போலிருப் பாரச்சு தாநந்த கோவிந்தனே.

ஆலம் - நஞ்சு. காத்தல் - ஒளித்தல். (5)

## குட்டிக்கரணம் போட்டாலுங் கொடுக்கிறது அரிது

தடுப்பார் புலியையும் பாம்பையும் வாய்கட்டித் தாங்கிக்கையால்
எடுப்பார் மழுவைத்தண் ணீர்மேல் நடப்ப ரெவருமெய்ச்சு
அடுப்பார் சபையினில் நூற்றெட் டடிக்கம்பத் தாடுவர்பொன்
கொடுப்பா ரரியர்கண் டாயச்சு தாநந்த கோவிந்தனே. (6)

## அயன் கணக்கு ஆருக்கும் தப்பாது

ஆலிக்க வாழ்ந்துண் டிருந்தாலும் யார்க்கும் அயன்வகுத்த
சோலிக் கணக்கின் படிதப்பு மோதொழு வார்க்குமுத்தி
பாலிக்கும் வெள்ளி மலையான் பிரம்படி பட்டுப்பிட்டின்
கூலிக்கு மண்சுமந் தானச்சு தாநந்த கோவிந்தனே.

ஆலிக்க - களிக்க. அயன் - பிரமன். பாலிக்கும் - கொடுக்கும். (7)

## கொடுத்தாற் குறை வராது

எடுத்தாலும் ஊறும் இறைத்தாலும் ஊறும் இடைநடுவே
மடுத்தால் மறிபடு மோமணற் கேணித்தண் ணீரதுபோல்
அடுத்தாரை வாழ்விக்கக் கல்வியுண் டானவ ரன்புடனே
கொடுத்தாற் குறைவரு மோஅச்சு தாநந்த கோவிந்தனே.

மடுத்தால் - மடை செய்தால். மறிபடுமோ - தடைப்படுமோ. (8)

## குளத்துக்கு மழை குந்தாணிபோற் பெய்யுமா ?

எந்தா யெனச்சென் றிரப்பவர்க் கீபவ ரெள்ளளவு
தந்தாலும் போதும் இகழ்வோண் ணுதெங்குஞ் சஞ்சரித்து
வந்தார் பருகுங் குளத்துக்குப் பெய்யு மழைத்துளிகள்
குந்தாணி போற்பெய்யு மோஅச்சு தாநந்த கோவிந்தனே.

குந்தாணி - பெரிய உரல். (9)

### கோடாலிக் காம்பு குலத்துக்கு ஈனம்

*பீடார் குலத்தினி லாகாத பிள்ளைதற் பெற்றெடுத்தோர்*
*வாடாது வாடக் குலநாச மாக்கிடு மற்றதுதான்*
*தாடாண்மை யாளர்கைக் குள்ளாய்த் தருக்குலஞ் சாயவெட்டும்*
*கோடாலிக் காம்பல்ல வோஅச்சு தாநந்த கோவிந்தனே.*

பீடார் - பெருமை பொருந்திய. தற்பெற்றெடுத்தோர் - தன்னைப் பெற்றெடுத்தவர். தாடாண்மை - முயற்சி. கோடாலி - கோடரி என்பதன் மரூஉ. (10)

### அரைக் காசுக்குப் போன கற்பு ஆயிரங் கொடுத்தாலும் வராது

*எடுத்தாலும் பிச்சை யமுதுநன் றேயில்லை யாகிலுயர்*
*விடுத்தாலும் வாசிநட் பில்லார் மனையில் விருந்தெனப்போய்*
*அடுத்தாவ தேதரைக் காசுக்குப் போனகற் பாயிரம்பொன்*
*கொடுத்தாலுந் தான்வரு மோஅச்சு தாநந்த கோவிந்தனே.*

வாசி - மேன்மை. (11)

### பொல்லாக் குணத்துக்கு நல்ல மருந்துண்டா?

*உணத்தக்க நன்மருந் தாற்பிணி போமென் றுலகிலுள்ளோர்*
*பணத்துக்குக் கொண்டு பரிகரிப் பார்விடம் பாய்ந்துசெத்த*
*பிணத்துக்கும் பச்சிலை யுண்டுபுல் லோர்க்குப் பிறக்கும்பொல்லாக்*
*குணத்துக்கு நன்மருந் தேதச்சு தாநந்த கோவிந்தனே.*

பரிகரிப்பார் - நீக்குவார். புல்லோர் - கீழோர். (12)

### கவி கொண்டார்க்குங் கீர்த்தி கலைப்பார்க்குங் கீர்த்தியா?

*மலைப்பாற் குறுமுனி போலும் புலவர் வடித்ததமிழ்*
*விலைப்பாற் படுத்திற்கொள் வார்க்குண்டு கீர்த்தி விதண்டைசெய்து*

கலைப்பார்க்கும்பேய்கொண்டநாய்களைப்போற்பல்லைக் காட்டிநின்று
குலைப்பார்க்குங் கீர்த்தியுண் டோஅச்சு தாநந்த கோவிந்தனே.

மலை - பொதியமலை. பால் - இடம். குறுமுனி - அகத்தியர். வடித்த - ஆராய்ந்த. விதண்டை - தன் கொள்கையையே நிறுத்திப் பேசுதல். (13)

## வெள்ளாட்டிமேற் சன்னதம் வந்தால் விழுந்து விழுந்து கும்பிடவேண்டும்

எள்ளாடும் வாணியர் செக்கடித் தூண்டிடும் ஈனரென்று
விள்ளா ரவர்க்குப் பவிஷுவந் தால்நிதம் வேலைசெய்யத்
தள்ளா தடிபடும் வெள்ளாட்டி மேற்சன்ன தங்கும்பிடு
கொள்ளாமற் போவதுண் டோஅச்சு தாநந்த கோவிந்தனே.

வெள்ளாட்டி - வேலைக்காரி. பவிஷு - வாழ்வு. சன்னதம் - தெய்வ ஆவேசம். (14)

## கெடுப்பாரைத் தெய்வங் கெடுக்கும் கொடுப்பாரைத் தடுக்கலாகாது

உடுப்பாருண் பார்தமைப் போல்வினை யாதொரு வன்பிழைப்பைக்
கெடுப்பாரைத்தெய்வங் கெடுக்குமென் றேசொல்லக்கேட்டிருந்தும்
விடுப்பாரன் றேபுல்லர் தூர்க்குண முற்றும் விதரணத்தாற்
கொடுப்பார் தமைத்தடுப் பாரச்சு தாநந்த கோவிந்தனே.

விதரணம் -கொடைக்குணம். (15)

## தோட்டத்து நரி கூட்டத்திலே வராது

நாட்டம் பணத்தில்வைக் குங்கள்ள லோபர்நல் நாவலர்கள்
ஈட்டந் தனைக்கண்டு கிட்டுவ ரோ இரை தேடிமனைத்
தோட்டம் புகுநரி யஞ்சாமல் நெஞ்சந் துணிந்துசந்தைக்
கூட்டந் தனில்வரு மோஅச்சு தாநந்த கோவிந்தனே.

நாவலர் - நாவிலே வல்லவர்கள்; வித்துவான்கள். ஈட்டம் - கூட்டம். (16)

நாய்வாலைக் குணக்கு எடுக்க ஆராலாகும்?

இணக்கா திரார்வல் விரும்பொடிந் தால்வைத் திருதலையும்
வணக்கா திரார்வில் நிமிர்ந்ததென் றூற்புல்லர் மாறுபடும்
பிணக்கார் தடுப்பவர் நாய்வாலை நீளப் பிடித்திழுத்துக்
குணக்கா ரெடுக்கவல் லாரச்சு தாநந்த கோவிந்தனே.

இணக்கல் - பொருத்தல். பிணக்கு- மாறுபாடு. குணக்கு - கோணல். (17)

குளப்படிநீரிறைத்தாற் கடற்பள்ளம் நிரம்புமா?

இறைமுறை யேழைக் குடிகளை நோகச்செய் தேபசும்பொன்
அறையிடும் பொக்கசந் தானிரம் பாதர சர்க்கியல்போ
நிறைகடற் கென்ன குறைவோ குளப்படி நீரிறைத்துக்
குறைவறச் செய்பவ ராரச்சு தாநந்த கோவிந்தனே.

குளப்படிநீர் - குளம்படி அழுந்திய இடத்திற் றங்கும் நீர். (18)

எருது ஈன்றதென்றாற் கொட்டாயிற் கட்டென்பவருண்டு

கிட்டி யொருவன் தலைக்கு ளிரத்னங் கிளைத்ததென்றால்
வெட்டி வெளிசெய்ய வேணுமென் றேவிரும் பார்பெரியோர்
எட்டினை மாத்திரம் புத்தியில் லாரெரு தீன்றதென்றாற்
கொட்டிலுட் கட்டுமென் பாரச்சு தாநந்த கோவிந்தனே.

எட்டினை: எள் + தினை - சிறிதும். (19)

முத்து குலத்தாற் பெருமைப்படும் மூடர் குலத்தாற் பெருமைப்படார்

சலத்தால் விளைகின்ற சிப்பியின் வாய்முத்தைத் தற்குலந்தான்
சொலத்தா னெவரும் இகழார் விரும்பித் தொகுத்தணிவார்
அலத்தா மதவறி வினர் செனனம தாகியநற்
குலத்தாற் பெருமைபெ றூரச்சு தாநந்த கோவிந்தனே.

அலம் - சஞ்சலம். (20)

### நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தது போலாம்

களிப்பாற் றுரைகளறி வினைக் கைப்பிடித் துச்செல்வம்
அளிப்பா ரெனிற்பின் நகைக்கிட மாமென்று மாவதில்லை
வெளிப்பாற் றிரிகின்ற நாயா னதைநடு வீட்டுக்குள்ளே
குளிப்பாட்டி வைத்தலொப் பாமச்சு தாநந்த கோவிந்தனே.

நகை - சிரிப்பு. (21)

### ஆண்டிகையில் அகப்பட்ட குரங்காய் அலைவார்

வரங்கா தலிக்குந் தவமுடை யோர்வங் கணமெவர்க்கும்
உரங்கா னுநன்மை பெறலாங் கயவ ருடன்கலந்தால்
அரங்காஞ் சபையிற் சடையாண்டி கையி லகப்பட்டதோர்
குரங்கா யலைவர்கண் டாயச்சு தாநந்த கோவிந்தனே.

காதலிக்கும் - விரும்பும். வங்கணம் - நட்பு. உரம் - வன்மை. அரங்கு - மேடை. (22)

### வம்புத் துரைத்தனத்தாரைக் கும்பிடத் தகுமோ?

செம்பிடு மேனி யுருக்கொண்ட தெய்வத்தைத் தெண்டமிட்டு
நம்பிட வேண்டும் பதம்பெற லாநம்பி னோர்க்குதவா
வம்பிடும் லோபத் துரைத்தனப் பேய்களை மன்னனென்று
கும்பிட வுந்தகு மோஅச்சு தானந்த கோவிந்தனே.

பதம் - மேல்நிலை; சுவர்க்கம். (23)

### குருவிக் கூட்டைக் கோலாலே குலைப்பார்களா?

சோட்டைப் புனைந்து ரணவேட்டை யாடுந் துரைகள்தங்கள்
நாட்டைப் புரப்பது ஞாயங் கெடுப்பது ஞாயமன்றே
வீட்டுக்குள் நம்பி யடைக்கலச் சிட்டுவெண் முட்டையிடும்
கூட்டைக் குலைப்பர்க ளோஅச்சு தாநந்த கோவிந்தனே.

### பொன்னின் குடத்துக்குப் பொட்டிட்டுப் பார்க்க வேண்டுமோ ?

சடத்துக் கழகென்பர் தான்கற்ற கல்வி தருமதல்லால்
இடத்தக்க பூஷணந் தானணி யார்விடி லேசுவரோ
புடத்துட் படத்தங்கக் கட்டி யுருக்கிப் புதுக்கிடபொற்
குடத்துக்குப் பொட்டழ கேனச்சு தாநந்த கோவிந்தனே.

சடம் - உடம்பு. (25)

### படியாள்வார் நீதிதப்பிற் குடி யார் இருப்பார் குவலயத்தில் ?

படியாளு மன்னர் மனுநீதி தப்பும் படி நடந்தால்
விடியாது நாடு மழைபொழி யாது விளைவுகுன்றும்
பொடியாம் பசும்புல் நெருப்பெழக் காயுமப் பூமிதனிற்
குடியா ரிருக்கவல் லாரச்சு தாநந்த கோவிந்தனே.

படி - பூமி. (26)

### கோவுக் கழகு செங்கோல்

பாவுக் கழகு பொருட்சுவை சொற்சுவை பன்மலர்ப்பூங்
காவுக் கழகு மயிலுங் குயிலுங்கண் டாய்கமலப்
பூவுக் கழகு மணமுந் திருவும் புவிபுரக்குங்
கோவுக் கழகுசெங் கோலச்சு தாநந்த கோவிந்தனே.

பா - பாட்டு. கா-சோலை. கமலம்-தாமரை. திரு -இலக்குமி.
புவி - பூமி. கோ - அரசன். (27)

### குட்டுப்பட்டாலும் மோதிரக் கையாற் குட்டுப் படவேண்டும்

மட்டுப் படாத அநுமா ரசோக வனமழித்துக்
கட்டுப்பட் டாரிந்த்ர சித்தன்கை யாற்கர்த்தன் காரியத்தால்
மூட்டுப்பட் டாலுஞ் செயங்கொள்வ ராகிற்பொன் மோதிரக்கைக்
குட்டுப்பட் டாற்குறை வோ அச்சு தாநந்த கோவிந்தனே.

மட்டு - அளவு. (28)

### திக்கு விசயங் கொள்பவ னுக்கும் செயாபசெய காலந் தெரியாது

இயல்புடன் திக்கு விசயங்கொள் வேந்தரென் றாலும்அப
செயம்வருங் காலந் தெரிபவ ரார்திரு வுந்திறமும்
புயபெல முன்னின்ற வோவிக்கிர மாதித்தன் போர்பொரப்போய்க்
குயவன்கை யால்மடிந் தானச்சு தாநந்த கோவிந்தனே.

இயல்பு - தன்மை : வீரத்தன்மை. திறம் - கூறுபாடு.
பொரல் - சண்டை செய்தல். (29)

### பாலைப்புகட்டுவோள் பாக்கியத்தையும் புகட்டுவாளோ ?

சலிக்கக் கணக்கென்ன தான்பெற்ற பிள்ளைக்குத் தாய்முலைப்பால்
ஒலிக்கக் கனிந்தழ ஊட்டி வளர்ப்பள்பின் ஊழ்வினையால்
பலிக்குட் படிலன்னை யென்செய்வள் பாக்கியம் பாலடையில்
குலுக்கிப் புகட்டுவ ளோ அச்சு தாநந்த கோவிந்தனே.

கணக்கு - காரணம். (30)

### எல்லை பாழ்பட்டாலும் கோல்லைக் கடமைவிடார்

சொல்லைப் புரட்டுங் கொடுங்கோன் மணியத்தர் தோஷமெண்ணார்
கல்லற் படுத்திக் குடிகளை நோகக் கணக்கெழுதி

எல்லைக்கு ளாநிலம் பாழ்படி னும்பிடித் தேருழுத
கொல்லைக் கடமைவிடா ரச்சு தாநந்த கோவிந்தனே.

கல்லல் - கலகம். (31)

கப்பலேறிப் பட்டகடன் கோட்டை நூற்றே விடியும்?

இட்டுநோற் றுப்பிறந் தாற்செல்வ முற்று மிடாதவிதி
பட்டுநூற் றுக்கிருந் தேயுழைத் தாலும் பலிசெய்துமோ
விட்டுநோக் குங்கப்ப லோடியு மேவிடி யாமனையிற்
கொட்டைநூற் றேவிடி யுமச்சு தாநந்த கோவிந்தனே.

மானுக்கொருபுள்ளி யேறினாலென்ன குறைந்தாலென்ன ?

நிறைந்தே வருங்கப்ப லாயிரந் தம்மினின் றோர்கப்பல்தான்
மறைந்தே திகைதப்பில் தாழ்வென் றெண் ணார்வர்த் தகர்கள்வனத்
துறைந்தே வளர்புள்ளி மானுக் குடம்பினி லோர்புள்ளிதான்
குறைந்தேதல் லான்மிகுந் தேதச்சு தாநந்த கோவிந்தனே.

திகை - திசை. (33)

கங்கா நதியில் முழுகினாலும் காக்கை 'அன்னம் ஆமா ?

ஒளித்தாலுந் துர்க்குணம் போமோ குருவுப தேசமந்த்ரம்
அளித்தாலும் புல்லர்நல் லோராவ ரோசென் றடுத்தடுத்துக்
களித்தா யிரந்தரங் காக முழுகிக்கங் காநதியிற்
குளித்தாலும் அன்னமொவ் வாதச்சு தாநந்த கோவிந்தனே.

கொல்லை பாழானாலும் குருவிக்கு இரைபஞ்சமா ?

தருவிற் பனமன்னர் கையிளைத் தாலென்ன தம்மைநம்பி
மருவித் திரியுஞ் சனங்கள் பசிகொண்டு வாட்டமெய்தார்
பருவக் குறிப்பின்றிச் சாவிபட் டாலும் பயிர்க்கொல்லையிற்
குருவிக் கிரைபஞ்ச மோஅச்சு தாநந்த கோவிந்தனே.

விற்பனம் - கல்வி. மருவல் - சேர்தல். (35)

இராவுத்தனைத் தள்ளினகுதிரை குழியும் பறித்ததுபோல

மொழியின் படிநட வாள்தன் கனைவனை மோசஞ்செய்து
பழியுஞ் சுமக்கும் படிசெய்த னம்பப் படர்விசிகம்
பொழியுஞ் சமரிடை ராவுத்த னைத்தள்ளிப் போட்டசுவம்
குழியும் பறித்ததொப் பாமச்சு தாநந்த கோவிந்தனே.

விசிகம் - அம்பு. சமர் - போர். அசுவம் - குதிரை. (36)

கொடிக்குக் காய் கனமா ?

அடித்தமு தூட்டி வளர்த்திடுந் தாய்தன் னகமெலிவாய்
மிடித்திடி னும்பெற்ற பிள்ளைக ளைக்கை விடநினையாள்
பொடித்தெழும் பிஞ்சு திரளாயும் பாரம் பொறுக்கும்படர்
கொடிக்கென்ன காய்கன மோஅச்சு தாநந்த கோவிந்தனே.

மிடித்திடல் - வறுமை அடைதல். பொடித்தல் - தோன்றல். (37)

நெருப்பு சிறிதென்று முன்றனையில் முடியலாமா ?

தண்டா ரணியு மாசிளம் பாலகர் தம்மையெதிர்
கண்டா லிளையரென் றெண்ணவொண் ணாதுகன் டாரெவரும்
அண்டா நெருப்பைச் சிறிதென்று முன்றனையின்முடிந்து
கொண்டா லதுசுடுங் காணச்சு தாநந்த கோவிந்தனே.

தண்டார் - தண் + தார் - குளிர்ச்சி பொருந்திய மாலை. (38)

மீன்குஞ்சுக்கு நீச்சுப் பழக்க வேண்டுமோ ?

பிஞ்சுப் பருவ முலைவிலைப் பெண்கள் பெறும்பொருட்கா
வஞ்சிக்கும் வித்தை குலவித்தை தானே வருமவர்க்கு
விஞ்சுக் குளப்புனல் நீச்சுப் பழக்குவித் தாரெவர்மீன்
குஞ்சுக்குத் தற்குணங் காணச்சு தாநந்த கோவிந்தனே.

பிஞ்சுப்பருவம் - இளம்பருவம். விஞ்சுதல் - மிகுதல். (39)

நீஞ்ச அறியாதவனை ஆறு இழுத்துக்கொண்டுபோம்

*விடுபோர் முகத்தில் நகைப்பா ரெனச்சுத்த வீரர்சண்டை*
*இடுபோ தொளிந்து பிழையாம லாண்மையிலார்மதிகெட்டு*
*அடுபோரி னிற்புகில் நீஞ்சறி யான்தனை யாறிழுத்துக்*
*கொடுபோன வாறொக்கு மேஅச்சு தானந்த கோவிந்தனே.*

முற்ற நனைந்தார்க்குக் குளிரில்லை

*தளிரே யனைய மெய்ப் பெண்டிர் கணவன் தனையிகழ்ந்து*
*வெளியே புறப்பட்டுக்கற்பழிந் தாற்பின்னை வெட்கமென்னை*
*நளிரே தரும்புனல் தோய்ந்துடம் பெங்கு நனைந்தவர்க்குக்*
*குளிரேதப் பாலென்ப ரேஅச்சு தானந்த கோவிந்தனே.*

*தளிர் - மாந்தளிர். நளிர் - குளிர். புனல் - நீர்.* (41)

நூற்றுக்கு இருப்பவர்க்கு ஐம்பதிற் சாவதில்லை
நூற்றுக்கு இருந்தாலும் கூற்றுக்கு இரை

*சோற்றுக்கடன்கொண் டிருக்குஞ்சரீரந் தொலையுநில்லாது*
*ஆற்றுப் புனலிற் குமிழியைப் போலென் றழுங்கிலென்றும்*
*நூற்றுக் கிருப்பவர்க் கைம்பதிற் சாவில்லை நூற்றுக்கப்பால்*
*கூற்றுக் கிரையென்ப ரேஅச்சு தானந்த கோவிந்தனே.*

*அழுங்குதல் - வருந்துதல். கூற்று - யமன்.* (42)

நன்றிசெய்த கீரியைக் கொன்ற பழங்கதைபோல்

*நன்றிசெய் தாரென் றறியாமல் தீங்குநமக் குச்செய்தார்*
*என்று செருக்கிவா ளூது குழந்தை இளந்தசையைத்*
*தின்றெதிர் வந்தது கீரியென் றந்தணன் தேவிமுன்னுள்*
*கொன்ற பழங்கதை யாமச்சு தானந்த கோவிந்தனே.*

*செருக்கல் - மயங்கல்.* (43)

கறையான் புற்றில் அரவங்குடிகொண்டதுபோல

அடிகொண் டளந்திட்டுக் கோட்டை யரண்செய்தென் னுண்மை யில்லார்
கெடிகொண்ட வேந்தர்கைக் கொள்வா ரவரைப்பின் கிட்ட வொட்டார்
படிகொண்ட மண்ணிற் கறையா னிடும்புற்றிற் பாம்புவந்து
குடிகொண் டிருப்பது வாமச்சு தாநந்த கோவிந்தனே.

அரண் - காவல். கெடி - அதிபத்தியம். (44)

பன்றிக்குட்டிக்கு ஒரு சந்தியேன் ?

தெட்டிப் பறிக்கின்ற வேசியர் வீட்டிற் றிரிந்தலையும்
மட்டிக் குலாமருக் காசார மேன்தெய்வ வந்தனையேன்
பட்டிக் கொதுங்கி அடிபடும் மூர்க்கரும் பன்றியிட்ட
குட்டிக் கொருசந்தி யேனச்சு தாநந்த கோவிந்தனே.

தெட்டி - ஏமாற்றி. குலாமர் - இழிந்தவர். (45)

அற்பருக்குப் பவிஷுவந்தால் அர்த்தராத்திரியிலுங் குடைபிடிக்கச் சொல்வார்

நடைகற்கு முன்னங் கொடைகற்ற பேர்க்கு நடக்கைவந்தாற்
புடையுற் றெவருந் துதிக்க வணங்கிப் புகழ்பெறுவார்
அடையற்ப ருக்குப் பவிஷுவந் தாலர்த்த ராத்ரியினும்
குடையைப் பிடியென்பர் காணச்சு தாநந்த கோவிந்தனே.

புடை - பக்கம். (46)

பிடாரியைப் பெண்டு வைத்துக் கொண்டவன் பேயன்

கண்டனுக் கேற்றவ ளாக்குல மானுஷிக் கற்பினளாத்
தெண்டனைக் கஞ்சி நடப்பவ ளாமணஞ் செய்வதல்லாற்
பிண்டமுந் துண்டமு நேர்ந்தே பிடாரியைப் பெண்டுவைத்துக்
கொண்டவன் பேயனன் றோஅச்சு தாநந்த கோவிந்தனே.

பிண்டம் - சோறு. துண்டம் - துணி. (47)

## கொழுமீதிகொள்ளும் குடிச்செல்வமே செல்வம்

பொடிச்செல்வம்யாசகச்செல்வம் கொடுமைப் பொருட்செல்வமோர்
நொடிச்செல்வம் ஈதலில் லாச்செல்வம் வீண்செல்வ நூற்றுக்குமே
மிடிச்செல்வ மின்றிச் சுகசீவி யாக்கொழு மீதிகொள்ளும்
குடிச்செல்வ மேசெல்வங் காணச்சு தாநந்த கோவிந்தனே.
(48)

## கசக்கி முகர லாகாது

வண்டா னதுமெள்ளப் பூமணங் கொள்ளும் வகையதுபோல்
பெண்டாகை யுள்ளவர் காமசம் போகம் பெறுவதல்லால்
கண்டா நரவின் மலரெடுத் தேகசக் கிம்முகர்ந்து
கொண்டால் மணந்தரு மோஅச்சு தாநந்த கோவிந்தனே.

சம்போகம் - புணர்ச்சி. (49)

## தானேகனியாத காய் தடிகொண்டடித்தாற் கனியாது

அண்டினர்க் கீபவர் தாமே தருவதல் லாதிரப்போர்
தெண்டனைக் காகக்கொடுப்பதுண் டோசெழுங் காய்மரத்திற்
கண்டிடில் தானே கனியாத முன்கனி யத்தடிகைக்
கொண்டடித் தாற்கனி யாதச்சு தாநந்த கோவிந்தனே.

இரப்போர் - யாசகர். (50)

## கிளியை வளர்த்துப் பூனைகையிற் கொடுப்பாருண்டா ?

விடுப்பார் பிழைக்கும் வழியினல் லோரன்றி வேறுபடக்
கெடுப்பார் வசஞ்செய்வ ரோநம்பி னோரைக் கிளிப்பிள்ளையை
எடுப்பார் கையார வளர்ப்பதல் லாலெட்டிப் பூனைகையிற்
கொடுப்பா ருலகிலுண் டோஅச்சு தாநந்த கோவிந்தனே.

வசம் - இடம். (51)

### எய்தவன் இருக்க அம்பை நோகலாமா?

உண்டான குற்றஞ் சகியாமல் வேந்தனுத் தாரமிட்டால்
திண்டாடத் தெண்டனை செய்வார்க்குக் குற்றமுந் தெண்டமுமோ
அண்டாமல் விற்பிடித் தெய்தோ னிருக்கக்கண் டம்பைநொந்து
கொண்டாலவ் அம்பென்செயும்அச்சு தாநந்த கோவிந்தனே.

எய்தவன் - செலுத்தினவன். (52)

### ஒருபுத்திரனும் குருபுத்திர னுசான்

வருபுத்ர வாஞ்சையிற் றெய்வத்தை வாழ்த்தி வணங்கிவரம்
தருபுத்ர னைப்பெறிற் காவடி கட்டித்தன் தாய்தந்தையை
ஒருபுத்ர னேனுஞ் சுமந்தநுண் டோஉல கம்புகழக்
குருபுத்ர னேசுமந் தானச்சு தாநந்த கோவிந்தனே.

வாஞ்சை - ஆசை. (53)

### சோக்கரிப்பார்க்கா சொர்க்கம் தீயில் குதிப்பவளுக்கல்லவோ சோர்க்கம்

கதிப்பா னடத்துங் குதிரையும் யானையுங் கால்பலமும்
மதிப்பா லிகல்சுத்த வீரர்க்குச் சொர்க்கம் வருவதுபோல்
துதிப்பார்க்குங் கொக்கரிப் பார்க்குமுண் டோதுணிந்தேநெருப்பில்
குதிப்பா ளொருத்திக்கன் றோஅச்சு தாநந்த கோவிந்தனே.

கதி - வேகம். கால் - காலாட்படை. இகல் - போர். (54)

### பரத்தைக்குக் கொடுக்கும் பணயத்தைக் குடிப்பெண் வாங்கிக் குலங்கெடுவோளா ?

மிடியிற் கொடுமைக் கிரப்பதல் லாற்குல மேன்மைகுன்றப்
படியிற் பசும்பொன் தரிற்கொள்வ ரோபரி வாற்பெரியோர்
கொடிய பரத்தையர்க் குக்கொடுக் கும்பண யங்கொளென்றால்
குடியிற்பெண் வாங்குவ ளோஅச்சு தாநந்த கோவிந்தனே.

பரிவ - அன்பு. பணயம் - பொருள். (55)

### கொடுங்கோல் அரசர்கீழ் குடியிருக்கலாகாது

திறமுஞ்செங் கோலும்உள மன்னர் நாட்டிற்சிந்தாகுலந்தீர்ந்
துறவுங்குடிசத மென்றிருப் பார்பயி ரிட்டுண்பர்காண்
அறவுங் கொடுமை செயுமன்னர் சீமைக்குள் ளாம்இருப்பு
குறவன் குடியிருப் பேஅச்சு தாநந்த கோவிந்தனே.

சிந்தாகுலம் - வருத்தம். அறவும் - மிகவும். (56)

### நல்லவர் கண்ணிற்பட்ட நாகமுஞ் சாகாது

பல்லால் விடங்கக்கு நாகந் திகைத்துப் பயந்தொதுங்கி
நல்லார்கண் காணவந் தாலும்கொல் லார்நண் ணலார்வரினும்
பொல்லா தவரில ரென்னூர் மனம்பொறுத் தேயவரைக்
கொல்லாமற் றூங்குவர் காணச்சு தாநந்த கோவிந்தனே.

நண்ணலார் - பகைவர். (57)

### புலையனுக்கு வாக்குசுத்தியும் ஆணையுமில்லை

செல்வாய்ப் படும்பனை யேட்டெழு தாமறைச் செம்மொழிபோற்
சொல்வார் சொல்நம்பத் தகுவதல் லாமற்சொல் லைப்புரட்டும்
வல்வாய்ப் புலையர்சொல் நம்புவ ரோநித்த மாடுதின்னக்
கொல்வார்க்கொ ராணையுண் டோஅச்சு தாநந்த கோவிந்தனே.

எழுதாமறை - எழுதப்படாத வேதம். செம்மொழி - சிறந்த மொழி. (58)

### பனங்காட்டிலிருந்துகொண்டு பாலைக்குடித்தாலும் கள்ளேன்பார்கள்

மிடித்தாலு மெத்தப் பசித்தாலு நல்லவர் மேரைதப்பி
வடித்தா யிரந்தரங் கள்குடிப் பார்மனை வாசல்புகார்
படித்தார்கள் கள்ளிறக் கும்பனங் காட்டினிற் பால்கொண்டுபோய்க்
குடித்தாலுங் கள்ளென்ப ரேஅச்சு தாநந்த கோவிந்தனே.

மேரை - மரியாதை. (59)

பட்சி பசித்தாலும் எட்டிக் கனியைத் தின்னாது
கொள்ளிகொண்டு தலை சொறிந்துகொள்ளார்

தெள்ளா ரமுதக் கடற்கரை யெட்டிச் செழுங்கனியைப்
புள்ளா னதுபசி கூர்ந்தாலு மேபுசி யாதுகண்டாய்
தள்ளாது கொள்ளிகொண் டேதினமென்று தலைசொறிந்து
கொள்ளா ரெவருஞ்சொன் னேனச்சு தாநந்த கோவிந்தனே.

தெள்ளாரமுதம் - தெளிந்த அருமையான தேவாமிர்தம். புள்-பறவை. (60)

பூவிற்குங் கடையிலே புல்லு விற்பதுபோல

தேறிய மானுஷ்ய முள்ளோர் பெருமை சிறுமைபட
மாறிய ஈன விருத்திக்குள் ளாய்நின்று வாழ்வதென்றால்
வீறிய பூமலர் விற்குங் கடையிற்புல் விற்கவிலை
கூறிய வாறொக்கு மேஅச்சு தாநந்த கோவிந்தனே.

தேறுதல் - தெளிதல். வீறிய - சிறந்த. (61)

குங்குமஞ் சுமந்த கழுதை மணம் அறியாது

தமத்தி னொளிசெய்யும் பொற்பூ ஷணங்கள் தலைச்சுமையாய்ச்
சுமத்தலு மாதர்க் கழகோ கணவற் றொழுதிருந்தால்
கமத்திற் பொதிச்சுமை யாய்ச்சுமந் தாலென் கழுதையுங்குங்
குமத்தின் மணங்கொளுந் மோர்அச்சு தாநந்த கோவிந்தனே.

தமம் - இருள். கமம்- நிறைவு. (62)

### பெருமான் நினைத்தால் வாழ்வு குறைவா ? பிரமா நினைத்தால் ஆயுசு குறைவா ?

*நிறையா யரசன் தயவுசெய் தாற்கலி நீங்கியிளம்*
*பிறையா வளர்ந்து நிரம்புநல் வாழ்வு பிரியப்பட்டு*
*மறையால் விளங்கும்பிரம் மா நினைந் தால்வர்த் திக் கும்வயது*
*குறையா தெனச்சொல்வ ரேஅச்சு தாநந்த கோவிந்தனே.*

கலி - வறுமை. வர்த்திக்கும் - வளரும். (63)

### தம்மினந் தம்மைத் தாங்கும் முலைசரிந்தால் வயிறுதாங்கும்

*தம்மின மானவர் கையிலைத் தேசர ணென்றடைந்தால்*
*வம்மினென் றுதரிக் கத்தகுந் தள்ள வழக்கல்லவே*
*விம்முமென் கொங்கை சரிந்தே வயிற்றில் விழிலதுதாங்*
*கும்மெனச் சொல்லுவ ரேஅச்சு தாநந்த கோவிந்தனே.*

சரண் - அடைக்கலம். (64)

### கழுதைக்கு விரிகட்டினதினலே குதிரையாமா ?

*சதிசெய்யு நீலியைப் பெண்ணென்று கொள்ளிற் றனதுகெடு*
*மதியது வாம்அவள் மேற்குறை யில்லைவை யாளிவிட்டால்*
*கதிபெற வேகட வாவிரி கட்டுங் கழுதையைநற்*
*குதிரையென் றேற்றங்கொள் ளாரச்சு தாநந்த கோவிந்தனே.*

வையாளி - குதிரையின் மிகுகதி. விரி - சேணம். (65)

### ஏர் பிடித்தவன் என்ன செய்வான் பானை பிடித்தவள் பாக்கியம்

*பெண்டகு மில்லவள் வந்த முகூர்த்தம் பெருகுஞ்செல்வம்*
*உண்டவள் வாழு மனையிலெந் நாளு முடிக்கைபொற்பூண்*

பண்டமி லேபென்னிற் பானை பிடித்தவள் பாக்கியமோர்
கொண்டவ னென்னசெய் வானச்சு தாநந்த கோவிந்தனே.

இல்லவள் - மனையாள். உடுக்கை - ஆடை. பண்டம் - பொருள். (66)

உடும்பு போனாலும் போகட்டும்
கையைவிட்டாற் போதும்

அடும்பழி காரனை வெட்டாமல் மன்னித் தனுப்பிவிட்டால்
தொடும்பழி பேச வழக்கு முண் டோதொடர்ந் தேபிடித்த
உடும்பது போயினும் போகட்டுங் கைவிடென் றுண்மை
[சொல்வோர்
கொடும்பழி யேன்சுமப் பாரச்சு தாநந்த கோவிந்தனே.

அடுதல் - கொல்லுதல். (67)

கரும்பு ருசியென்று வேரோடே பிடுங்கலாகாது

வள்ள லெனத்தருந் தாதாவென் றேதினம் வந்துவந்து
கள்ள மனத்திற் பொருள்கேட் கொணுதுகண் டாய்திரளா
உள்ள கரும்புதித் திப்பென வேருட னேபிடுங்கிக்
கொள்ள நினைப்பர்க ளோஅச்சு தாநந்த கோவிந்தனே.

வள்ளல் - வரையாது கொடுப்பவன். தாதா - கொடையாளி. (68)

அழிந்த நந்தவனத்திலே
அசுவம் மேய்ந்தேன்ன கழுதை மேய்ந்தேன்ன ?

விதிமுறை நீதிசெங் கோல்கெடத் தேச மெலிந்தலைய
மதிலரண் செய்த லெவர்க்காக நந்த வனமழிந்தால்
எதிரெதி ரோடிக் கழுதைகள் மேயிலென் ஏற்றந்தரும்
குதிரைகள் மேய்ந்திடி லென்னச்சு தாநந்த கோவிந்தனே.

ஏற்றம் - மேன்மை. (69)

## ஆடு கொழுக்கிறது இடையனுக்கு லாபம்

செழித்திடுஞ் செல்வி பிறந்தகம் போய்த்திரும் பாமையினல்
கழுத்திடு தாலிகை யாற்கட்டி ஞேன்பல காலும்வந்தே
அழைத்திடக் கூட்டி விடாரே யிடையனுக் காடுநன்ருய்க்
கொழுத்திடல் லாபமன் ருே அச்சு தாநந்த கோவிந்தனே.

செல்வி - பெண். பிறந்தகம் - தாய்வீடு. (70)

## பன்றியின் பின்போன பசுக்கன்றும் மலந்தின்னும்

பன்றி யுடனுற வாகப் பழகினும் பாற்பசுவின்
கன்றும் மலத்தைப் புசிக்குமென் பார்அக் கதையதுபோல்
சென்றுற வாடிக் கயவர்பின் னேதிரிந் தாலறிவு
குன்றும் வசைக்கிட மாமச்சு தாநந்த கோவிந்தனே.

வசை-பழி. (71)

## கொள்ளைக்குப் போனலுங் கூட்டாகாது

தேட்டாளர் தம்மிச்சை யாய்த்தேடு வர்பொருள் தேடும்வழி
காட்டா ரெவர்க்கும்பின் வில்லங்க மாகு மெனக்கதவு
பூட்டாத பொக்கச வீட்டினிற் கொள்ளைக்குப் போய்ப்புகினும்
கூட்டாகு மோவென்ப ரேஅச்சு தாநந்த கோவிந்தனே.

தேட்டாளர் - பொருள் தேடுவோர். வில்லங்கம் - இடையூறு.
(72)

## ஆனை கட்டச் சங்கிலி தானே யெடுத்துக் கொடுக்கும்

தொடுத்திடு மூழ்வினை போகா தெவர்க்குந் தொடருமுற்றும்
இடுக்கண் வருமது தன்னல் வருங்குற்ற மென்பர்தன்னைத்

தடுத்துத் தன்கா விடநிக ளந்தனைத் தாவெடுத்துக்
கொடுத்திடும் யானைகண் டாய்அச்சு தாநந்த கோவிந்தனே.

இடுக்கண் - துன்பம். நிகளம் - சங்கிலி. (73)

குளத்தைக் கலக்கிப் பருந்துக்கு இரையிட்டதுபோல

தளத்தைக் கண்டஞ்சிக் குறுமன்னர் கப்பந் தரக்கொள்வர்போர்க்
களத்துட் படவவர் சீமையை வேந்தர்கைக் கொண்டழித்தல்
விளர்த்திட்ட மீன்களைக் காகம் பருந்து விருந்துணவே
குளத்தைக் கலக்கிய தாமச்சு தாநந்த கோவிந்தனே.

தளம் - சேனை. விளர்த்தல் - வெளுத்தல், கொழுத்தல். (74)

தோட்டிபோ லுழைக்க வேண்டும்
துரைபோற் சுகிக்க வேண்டும்

தோட்டியைப் போலுழைப் பார்பொருள் தேடிச் சுகிப்பதல்லால்
பூட்டி யறைக்குள் புதைத்துவைத் தாற்புசி யாரெவர்க்கோ
ஈட்டிடத் தேன்பல பூவினிற் சென்றுசென் றீயெடுத்துக்
கூட்டி யிழப்பது வாமச்சு தாநந்த கோவிந்தனே. (75)

துற்சனப் பிள்ளைக்கு ஊரார் புத்திசொல்வார்

சற்சன ராயுற வுற்றுரைப் பேணித் தவத்தியல்பாய்
நற்சன னங்க ளெடுத்தாரை மெச்சுவர் நாணமில்லாத்
துற்சனப் பிள்ளைகட் கூரார்சொல் வார்புத்தியென் றுலகோர்
குற்சிதஞ் சொல்வர்மெய் யேஅச்சு தாநந்த கோவிந்தனே.

சற்சனர் - நல்லவர். பேணி - விரும்பி, காத்து. துற்சனர் - தீயோர். குற்சிதம்-அருவருப்பான மொழி. (76)

வயிற்றைப் பீறிக் காட்டினாலும்
மகேந்திரசாலம் என்பார்

தேறிய நெஞ்சிற் பரிசுத்த னென்று தெளிந்திடினும்
மாறிய வன்கண்ண ருண்மைகொள் ளாரொரு வன்வயிற்றைப்

பீறிமுன் காட்டிலு மாகேந்திர சாலப் பிரமையென்றே
கூறி யலைப்பர்கள் காண் அச்சு தாநந்த கோவிந்தனே.

வன்கண்ணர் - கொடியர் மகேந்திரஜாலம் – பெரிய இந்திர ஜாலம், அற்புதங்களைக் காட்டும் வித்தை. (77)

கோழி கூப்பிட்டு விடிகிறபொழுது
குக்கல் குரைத்தா விடியும் ?

நிரைத்தோளி யிட்ட திரைப்பாண்டில் மேலிட்ட நித்திரைகொளும்
தரைத்தோ கையர்வந் தெழுப்புந் தபனன் சமயமறிந்
திரைத்தோ வெனக்குக் குடங்கூப பிடாம விரவிடைநாய்
குரைத்தோ விடியுமென் பார் அச்சு தாநந்த கோவிந்தனே.

குக்கல் – நாய். பாண்டில் - கட்டில். தபனன் - சூரியன். குக்குடம் - கோழி. (78)

உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது

தருவையொப் பாமோ ஐந் தருவென்ப ரோவுத் தமபுருஷன்
உருவையொப் பாருந் தமராவ ரோகுண மொப்பதல்லால்
கருவியொப் பாயுய ரப்பறந் தாலுங் கருடனுக்கூர்க்
குருவியொப் பாமென்ப ரோ அச்சு தாநந்த கோவிந்தனே.

ஐந்தருக்கள் - கற்பகம், அரிசந்தனம், சந்தானம், மந்தாரம், பாரிசாதம். (79)

ஐங்காதம் போனாலும் அகப்பை விலை
அரைக் காசுதான்

ஐங்காதம் போயு மகப்பை விலையரைக் காசெனப்பர்காண்
எங்காகி லும்பண மிட்டுக்கொள் ளாரறி வினர்சென்றால்
சிங்கார மானபொற் பூஷணம் ஆடை தியாகம்பெறார்
கொங்கார் துளபத்த னே அச்சு தாநந்த கோவிந்தனே.

தியாகம் - கொடை. கொங்கு - வாசனை. (80)

மழைக்குத் தண்ணீர் மொண்டு வார்ப்பவர் ஆர்?

மழைக்குத்தண் ணீர்மொண்டு வார்ப்பவ ராரிந்த வையகத்தோர்
பிழைக்கப் பொழிவது தற்குணங் காண்பெறும் பேற்றினுக்காய்
அழைக்கக் கசேந்திரன் மூலமென் றன்றதி னன்பினுளம்
குழைக்கக் கராவரிந் தாயச்சு தாநந்த கோவிந்தனே.

வையகத்தோர் - பூமியிலுள்ளவர். கசேந்திரன் - யானைகளுக்கு அரசன்; ஒரு யானையின் பெயர். மூலம் - ஆதிமூலம். கரா - முதலை.. (81)

நரிவால் பற்றி நதி கடக்க லாகாது

திண்டாட வெட்டும் ரணகளத் திற்செயங் கொள்ளும்வலி
கண்டா லெதிர்நிற்பர் கூளப் படையைக்கைக் கொண்டுபுகார்
அண்டாத வெள்ளத்தி லோடங்கொ ளாமலடு நரிவால்
கொண்டாறு தாண்டுவ ரோஅச்சு தாநந்த கோவிந்தனே.

கூளப்படை - சிதறுண்ட சேனை. (82)

குடியிருக்கிற வீட்டிலே கொள்ளி
வைத்தாற்போல

நள்ளிருட் போதில் விளக்கிட்ட தாம்நல் லவரிருந்தால்
தெள்ளிய சீர்பெறும் வீட்டுக் கழகென்பர் தீம்பர்வந்தால்
தள்ளி விடாமற் குடிவைத்துக் கொள்ளிற் றமதிறப்பிற்
கொள்ளிவைத் துக்கொண்ட தாம்அச்சு தாநந்த கோவிந்தனே.

நள் - நடு. இறப்பு - வீட்டிறப்பு. கொள்ளி-நெருப்பு. (83)

தலைவன் நிற்கத் தண்டு நிற்கும்
தலைவன் மயங்கச் சர்வமும் மயங்கும்

பொரக்கத் திகட்டிக்கொண் டேதுரை யானவன் போர்முகத்தில்
வரக்கொக் கரித்தெழுஞ் சேனையுஞ் சாது வரும்விசயம்
அரக்கர்க் கிராம னெதிர்நிற்க லங்கை யழித்ததன்று
குரக்குப் படையல்ல வோஅச்சு தாநந்த கோவிந்தனே.

தண்டு - சேனை. விசயம் - வெற்றி. (84)

குழந்தையுந் தெய்வமுங் கொண்டாடின இடத்திலே

*அண்டா ரெவருங் குணவீனர் செல்வர்க ளாயிருந்தும்*
*கண்டா தரவி னழைத்தால் வருவர் கரிசனம*
*துண்டாய்க் குழந்தையுந் தெய்வமு நித்த முறவுசெய்து*
*கொண்டாட முன்னிற்கு மேஅச்சு தானந்த கோவிந்தனே.*

ஆதரவு - விருப்பம். கரிசனம் - அன்பு. (85)

கோணக் கொம்பேறியென்ன குதிரை யேறியென்ன
வீணர்க்குங் கீர்த்திக்கும் மெத்தவுந் தூரம்

*பூணத் தகும்புகழ்ப் பூஷணங் கொள்ளப் பொருளுளவா*
*வீணர்க்குங் கீர்த்திக்கு மெத்தவுந் தூர மிகுஞ்செல்வராய்க்*
*காணத்தை யுண்ணுங் குதிரையி லேறிற் கவிக்குலம்போற்*
*கோணக்கொம் பேறிலென் னும்அச்சு தானந்த கோவிந்தனே.*

காணம் - கொள்ளு. கவிக்குலம் - குரங்குக் கூட்டம். (86)

பன்றிக்குட்டி பருத்த யானைக் குட்டியாமா

*வெஞ்சரக் குப்பை தொடுத்தெய்ய வேவெற்றி ராகவன்கைச்*
*செஞ்சரத் துக்கிணை யாமென்ப ரோவிட்ட தீனிதின்று*
*சஞ்சரிக் கும்பன் றிக் குட்டிகள் தாமதத் தாரைபொங்கும்*
*குஞ்சரக் கன்றுக்கொவ் வாஅச்சு தானந்த கோவிந்தனே.*

வெஞ்சரம் - கொடிய அம்பு. கடாம் - மதம். (87)

தன்னைக் கொல்ல வந்த பசுவைத்
தான் கொன்றாற் பாவமில்லை

*ஆறிய வெஞ்சினத் தீமூளச் செய்யி லரசர்கொல்லார்*
*தேறிய நெஞ்சன் தனைக்கொல்ல வந்த சினப்பசுவை*
*மாறிடக் கொன்றிடிற் பாவ மிலையென்று வையகத்தோர்*
*கூறிய வார்த்தைபொய் யோஅச்சு தானந்த கோவிந்தனே.*

(88)

### செம்பாலடித்த காசுங் கோடார்

வம்பா வசைக்கவி நூறுசொன் னாலும்வை தாலுமெண்ணார்
தம்பாடு சொல்லி வழிவிடு வார்கள் தனப்புலையர்
செம்பா லடித்திடுங் காசுங்கொ டார்செய்ய ரோகுதிரைக்
கொம்பா கிலுங்கொடுப் பார்அச்சு தாநந்த கோவிந்தனே.

பாடு - வருத்தம். (89)

### பொருளும் போகமுங் கூடவரா

கூடவ ராதிட்ட பொற்பூ ஷணங்கள் துரையெனக்கொண்
டாடவ ராது சதுரங்க சேனையு மாண்மையும்போம்
ஓடவ ராதெம தூதர்வந் தாலுள்ள ரொக்கமுந்தன்
கூடவ ராதென்றெண் ணாரச்சு தாநந்த கோவிந்தனே.

சதுரங்கம் - நான்கு உறுப்புக்கள்; அவை : யானை, குதிரை, தேர், காலாள் என்பவை. (90)

### இயல்பாய் மணமில்லாத சந்தனக் கட்டை இழைத்தாலுங் குழைத்தாலு மணக்காது

அழைத்தா யிரந்தரம் புத்திசொன் னாலடங் காதவம்பர்
தழைத்தாலு மென்னவர் கெட்டாலு மென்கந்த மற்றகுற
டிழைத்தா யிரந்தரஞ் சாணையிற் சுற்றி யெடுத்துநன்னீர்க்
குழைத்தாலும் வாசந்த ராதச்சு தாநந்த கோவிந்தனே.

குறடு - கட்டை. (91)

### கூடி யிருந்து குலாவுவார் வீட்டில் ஓடி யுண்ணுங் கூழு மினிதே

சூழாது வண்டினஞ் செண்பகப் பூவைத் தொடாதுவெறும்
பாழான நத்தத் தெருக்கின்ற பூமணம் பற்றிப்புல்லும்
தாழாது நட்பி னுறவுகொண் டாடத்தக் கார்மனையில்
கூழா கிலுமினி தேஅச்சு தாநந்த கோவிந்தனே. (92)

### ஆயிரம் பசுக்களில் ஒரு பசு உதைத்துக் கொண்டால் என்ன ?

தண்டா தருள்செய்யுந் தாதாக் களிலொருத் தன்மறுத்தல்
கண்டா லதுகொண்டு தாழ்வல்ல வேகலி யாயிரப்போர்க்
குண்டான பாற்கறக் கும்பசு ஆயிரத் தொன்றுதைத்துக்
கொண்டாற் குறையென்ப ரோஅச்சு தாநந்த கோவிந்தனே.

தண்டாது - நீங்காமல். (93)

### இறந்தவன் பிள்ளை இருந்தவன் அடைக்கலம்

இடைப்படச் செத்தவன் பிள்ளைதன் றாக இருந்தவன்கை
அடைக்கல மென்றுல கஞ்சொலு மேயது போல்தமியேன்
மிடைப்படப் பார்த்திருந் தாற்றகு மோபசு மேய்த்தஅந்நாள்
குடைக்குவ டேந்தினை யேஅச்சு தாநந்த கோவிந்தனே.

குவடு - மலை. (94)

### கரும்பு கசப்பது வாய்க் குற்றம்

வணங்காருன் பாதங்கள் வாழ்த்தாருன் நாமங்கள் வாழ்த்தி நித்தம்
இணங்கா ரறிவற்ற புல்லர்நல் லோர்தம் இயற்கைதன்றூர்
கணங்காணுங் கட்டிக் கரும்புதின் பார்க்குக் கசப்பதுவாய்க்
குணங்காண் கரும்பதன் றேஅச்சு தாநந்த கோவிந்தனே.

கணம் – திரட்சி. (95)

### நடந்தார்க்கு நாடெங்கும் உறவு கிடந்தார்க்குப் பாயே உறவு

நடந்தார்க்கு நாடெங்கு நல்லுற வாகு நடையொழிந்து
கிடந்தார்க்குப் பாய லுறவன்றி யென்னென்று கேட்பவரார்
இடந்தா வெனக்குன் பதமே கதிசிற் றிடைச்சியர்பாற்
குடந்தா வியமுதந் தாஅச்சு தாநந்த கோவிந்தனே.

பாயல் - படுக்கை. (96)

### கரும்பு தின்னக் கூலி கொடுப்பார்களா ?

வாலியைக் கொன்றுசுக் கிரீவனைப் பட்டத்தில் வைத்துமுந்நீர்
வேலிக டந்திலங் கைவீ டணனை விளங்கவைத் தாய்
காலியை மேய்த்துள்ள பால்குடித் தாய்நற் கரும்புதின்னக்
கூலிகொ டுப்பவ ரார்அச்சு தாநந்த கோவிந்தனே.

முந்நீர் - கடல். காலி - பசு. (97)

### வல்லார் இளைத்தால் வந்திளைப்பாறுமென்று சொல்லாதிரார்கள் சுத்தவீரர்கள்

வல்லா ரமர்செய்து கையிளைத் தாலவர் வம்மினெனச்
சொல்லா திராரிளைப் பாறுமென் பார்சுத்த வீரர்படை
எல்லா மிழந்து நிராயுத னாய்நின் றும் ராவணனைக்
கொல்லாது விட்டனை யேஅச்சு தாநந்த கோவிந்தனே.

அமர் - சண்டை. (98)

### வஞ்சகர்க்கு எத்தனை வாஞ்சையாய் நடக்கினும் நெஞ்சகந் தன்னில் நேசங் கொள்ளார்

நெஞ்சார வஞ்சகர்க்கெத்தனை செய்யினு நேசங்கொள்ளார்
அஞ்சாயன் மென்குயின் முட்டையைத் தன்முட்டை யா
[மென்றெண்ணி
எஞ்சா தடைகிடந் துங்கருங் காக மிகல்விளைக்கக்
குஞ்சாகிப் பூங்குயி லாமச்சு தாநந்த கோவிந்தனே.

அம் - அழகு. சாயல் - மென்மை. எஞ்சாது - குறையாது.
இகல் - பகை. (99)

மஞ்சனந் தேடி மலர்தேடி யுன்னை வணங்கப்பெற்றேன்
நெஞ்சகந் தன்னில் நினைக்கப்பெற் றேன்நினை யாவிடினும்

அஞ்சலன் றென்ன உனக்கே பரமட லாழிகொண்டு
குஞ்சரங் காத்தவ னேஅச்சு தாநந்த கோவிந்தனே.

மஞ்சனம் - ஆட்டுதற்கு நீர். பரம் - பாரம். அடல் - கொல்லுதல். ஆழி-சக்கரம் (சுதரிசனம்) (100)

தேனே யெனுமொழி மாஞர் கவியிற் சேர்ந்துறினும்
தானே யெனக்குப் பதந்தரு வான்அன் று சானகிக்கா
மானே யெனவந்த மாரீசன் மேற்செல வாளிதொட்ட
கோனேசக் ராயுத னேஅச்சு தாநந்த கோவிந்தனே.

வாளி - அம்பு. (101)

முந்தச் செனனத்தில் யான்செய்த பூசை முயற்சியிற்கோ
விந்தச் சதகம்விண் ணப்பஞ்செய் தேனென் வினைதொலைத்தேன்
இந்தச் செனனத்தில் துன்பப் படாம லிருந்திடவை
குந்தப் பதவிபெற் றேன்அச்சு தாநந்த கோவிந்தனே.

சதகம் - நூறு பாட்டுக்களால் ஆகிய நூல். (102)

முற்றிற்று.

ஸ்ரீ

கோவிந்த சதகத்தின்

# செய்யுள் முதற்குறிப் பகராதி


| செய்யுள் | பக்கம் | செய்யுள் | பக்கம் | செய்யுள் | பக்கம் |
|---|---|---|---|---|---|
| அடிகொண் | 13 | ஐங்காதம் | 22 | சோட்டைப்புனை | 7 |
| அடித்தமு | 11 | ஒளித்தாலுந் | 10 | சோற்றுக்கடன் | 12 |
| அடும்பழி | 19 | கட்டாண்மை | 2 | தடுப்பார் | 3 |
| அண்டாரெவரும் | 24 | கண்டனுக்கேற்ற | 13 | தண்டாதருள் | 26 |
| அண்டினர் | 14 | கதிப்பானடத் | 15 | தண்டாரணியும் | 11 |
| அழைத்தாயிரந் | 25 | கழுக்கட்டி | 2 | தமத்தினொளி | 17 |
| ஆலிக்கவாழ்ந் | 3 | களிப்பாற் | 7 | தம்மினமானவர் | 18 |
| ஆறியவெஞ்சின | 24 | கிட்டியொருவன் | 6 | தருவிற்பன | 10 |
| இடைப்பட | 26 | சடத்துக்கழ | 8 | தருவையொப்பா | 22 |
| இட்டுநோற் | 10 | சதிசெய்யுநீலி | 18 | தனத்தைக்கண் | 21 |
| இணக்காதிரார் | 6 | சலத்தால்விளை | 6 | தனியேயனைய | 12 |
| இயல்புடன் | 9 | சலிக்கக் | 9 | திண்டாடவெட்டு | 23 |
| இறைமுறை | 6 | சற்சனரா | 21 | திறமுஞ்செங்கோ | 16 |
| உடுப்பாருண் | 5 | சூடவராதிட்ட | 25 | தெட்டிப்பறிக்கின் | 13 |
| உணத்தக்க | 4 | சூழாதவண் | 25 | தெள்ளாரமுத | 17 |
| உண்டான | 15 | செடிக்கொரு | 1 | தேட்டாளர் | 20 |
| எடுத்தாலும்ஊறும் | 3 | செம்பிடுமேனி | 7 | தேறியநெஞ்சிற் | 21 |
| எடுத்தாலும் | 4 | செல்வாய்ப்படும் | 16 | தேறியமானுஷ்ய | 17 |
| எந்தாயென | 3 | செழித்திடுஞ் | 20 | தேனேயெனு | 28 |
| எள்ளாடும் | 5 | சொல்லைப்புரட்டுங் | 9 | தொடுத்திடு | 20 |

| செய்யுள் | பக்கம் | செய்யுள் | பக்கம் | செய்யுள் | பக்கம் |
|---|---|---|---|---|---|
| தோட்டியை | 21 | பாவுக்கழகு | 8 | மொழியின்படி | 11 |
| நடந்தார்க்கு | 26 | பிஞ்சுப்பருவ | 11 | வணங்கா | 26 |
| நடைகற்கு | 13 | பீடார்குலத்தி | 4 | வண்டானது | 14 |
| நள்ளிருட்போ | 23 | பூணத்தகும் | 24 | வம்பாவசைக் | 25 |
| நன்றிசெய்தா | 12 | பெண்டகுமில்லவ | 18 | வரங்காதலி | 7 |
| நாட்டம்பண | 5 | பொடிச்செல்வம் | 14 | வருபுத்ர | 15 |
| நிரைத்தோளியிட் | 22 | பொரக்கத்தி | 23 | வல்லாரமர் | 27 |
| நிறைந்தேவரு | 10 | மஞ்சனந்தேடி | 27 | வள்ளலெனத் | 19 |
| நிறையாயாசன் | 18 | மட்டுப்படாத | 9 | வாலியை | 27 |
| நீலங்கவர் | 2 | மலைப்பாற் | 4 | விதிமுறைநீதி | 19 |
| நெஞ்சார | 27 | மழைக்குத்தண் | 23 | விடுபோர்முகத் | 12 |
| படியாளுமன்னர் | 8 | மாவேழங் | 1 | விடுப்பார் | 14 |
| பல்லால்விடங் | 16 | மிடித்தாலு | 16 | வெஞ்சரக்குப்பை | 24 |
| பன்றியுட | 20 | மிடியிற்கொடு | 15 | | |
| பாவிட்டதாகிய | 2 | முந்தச்செனன | 28 | | |

19 JUL 1991